*1972 ஆகஸ்ட் 11]*

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, இந்தக் கால்வாய் சீரமைப்பு வேலைகள் முழுவதும் முடிவடையாமல் அரைகுறையாக இருப்பதால் தண்ணீர்ப் பாசனம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கால்வாயையும் எடுத்துக் கொண்டு வேலையை ஒரே ஆண்டிலே முடிப்பதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒரே ஆண்டில் முடிப்பது சாத்தியமில்லை என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். எனவே தான் நான்காண்டுத் திட்டமாகப் போட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

*73 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் வடிகால் சீரமைப்புக்காக உலக வங்கி கடன் தர முன் வந்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** காவிரி கயவாய்ப் பகுதியில், வடிகால் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ரூ. 680 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பழைய காவிரி கயவாய்ப் பகுதி திட்டத்தைப் புதுப்பித்தல் குறித்த திட்ட அறிக்கையில் இது சேர்க்கப்பட்டுள்ளது. இது 1969-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் இங்கு வந்திருந்த உலக வங்கி ஆய்வுக் குழுவின்முன் வைக்கப்பட்டது. திட்ட அறிக்கை, மத்திய நீர் மின்சார ஆணைக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வடிகால் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பல்லாண்டு காலமாக கேட்டுக்கொண்டு வருகிறார்கள். அதை நிறைவேற்றாமல் இம்மாதிரி காலந்தாழ்த்துவது அந்த மாவட்டத்தினுடைய விவசாய அபிவிருத்திக்குப் பாதகமாக இருக்கிறது அல்லவா ? ஆகவே உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தீவிர முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 1972-73-ஆம் ஆண்டில் தொடங்கி அடுத்த நான்கு ஆண்டுகளில் சுமார் 12 கோடியே 88 லட்சம் ரூபாய் செலவில் காவிரி கயவாய்ப் பாசனத் திட்டங்களை விரிவாக்க உத்தரவுகள் பிறப் பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வடிகால் பிரச்னையைப் பொறுத்தும் சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டும் துரிதப்படுத்தப் படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இந்தக் காவேரி டெல்டாப் பகுதியை சீரமைப்புச் செய்ய எவ்வளவு ஆண்டுகளுக்கு முன் முயற்சி எடுக்கப்பட்டது? எவ்வளவு ஆண்டுக் காலம் ஆய்வில் இருந்தது? அது முடிவு அடைய எவ்வளவு ஆண்டுக் காலம் ஆகும் என்று தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எனக்குத் தெரிந்தவரையில் 1968-69-ல் பரிசீலிக்கப்பட்டது. 1969-ல் இது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது சில திட்டங்களைப் பொறுத்த வரையில் நம் அரசு நான்கு ஆண்டுகளுக்குள்ளாக நிறைவேற்ற ஏற்பாடு செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரம் ஏற்கனவே முடிந்து விட்டது. சிறிது நேரத்திற்குத்தான் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. நம்பிக்கை யில்லாத் தீர்மானம் வருகிறது. நாற்பது பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

## பொன்னனியாறு திட்டம்

*74 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், பொன்னனியாறு திட்ட வேலை எப்போது துவக்கப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

(உ) இதனால் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) 26—6—70 அன்று வேலை துவக்கப்பட்டது.

(இ) தற்போது வேலை துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது.

(உ) இதனால் புதியதாகப் பாசன வசதி பெறும் நிலம் 1830 ஏக்கர். மேலும் தற்சமயம் பாசனத்தில் உள்ள 271 ஏக்கருக்கு நம்பகமான பாசன வசதி அளிக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: என் தொகுதியில் பஞ்சப்பட்டியில் ஒரு ஏரி இருக்கிறது. அதில் தண்ணீர் பஞ்சம் நிறைய இருக்கிறது. ஆகவே இதை சற்று நீட்டினால் அந்த ஏரிக்கு தண்ணீர் வர வாய்ப்பிருக்கும். சில ஆயிரம் ஏக்கர்கள் விளை நிலமும் கிடைக்கும்.